பேரூராட்சி அலுவலகம்,
இரா.புதுப்பட்டி.

<u>ந.க.எண். 238 /2010</u> <u>நாள்.17. 08. 2010.</u>

# அட்டவணை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

நாமக்கல் மாவட்டம், இரா.புதுப்பட்டி பேரூராட்சியில் 2010–2011–ம் ஆண்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வேலையை செய்ய இரா.புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு 01.09.2010–ம் தேதி புதன் கிழமை மாலை 5.00 மணிக்குள் மின்னனு ஒப்பந்த முறையில் ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது.

## அட்டவணை

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (இலட்சத்தில்) | செலுத்த வேண்டிய ஒப்பந்த புள்ளி வைப்புத் தொகை | அட்டவணை ஒப்பந்தபுள்ளி படிவம் விற்பனைத் தொகை (வரிகள் உட்பட) | ஒப்பந்த தாரரின் தகுதி | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்திரவு தேதி முதல்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | வடக்கு போயர் தெரு முதல் மலைவாழ் மக்கள் காலனி இணைப்பு சாலை வரை ஈரடுக்கு கப்பியுடன் கூடிய தார்சாலை அமைத்தல் (நீளம் 1200மீ). | 13.45 | 26900/– | 6500/– | 4–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் | 120 நாட்கள் |

## நிபந்தனைகள்

1. மேற்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோருபவர்கள் www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் Digital Signature பெற்ற ஒப்பந்ததாரர்கள் மட்டுமே பதிவேற்றம் மற்றும் பதிவிரக்கம் செய்ய முடியும். மேலும், ஒப்பந்தப்புள்ளியினை 01.09.2010ம் தேதி மாலை 5.00 மணிக்குள் பூர்த்தி செய்ய வேண்டும். ஒப்பந்தப்புள்ளியினை மின்னனு முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பிறகு வேலையின் மதிப்பீட்டு தொகைக்கு அட்டவணை கலம் 4ல் உள்ள வைப்புத் தொகையையும், அட்டவணை கலம் எண்.5ல் உள்ள ஒப்பந்தப்புள்ளி படிவம் விற்பனை தொகையும் சேர்த்து பேரூராட்சி அலுவலகத்தில் வங்கி வரைவோலையாக 01.09.2010ம் தேதி மாலை 5.00 மணிக்குள் பேரூராட்சி அலுவலகத்தில் சமர்பித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

2. அவ்வாறு பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவத்தை 02.09.2010ம் தேதி வியாழக் கிழமை காலை 11.00 மணிக்கு செயல் அலுவலரால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் திறந்து பார்க்கப்படும். இதில் மதிப்பீட்டிற்கு குறைந்த வீதத்திற்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்ளப்படும்.

3. மேற்படி நிபந்தனைகளின்படி வரப்பெறாத வங்கி வரைவோலைகள், குறிப்பிட்ட கால நேரத்திற்குப்பின் காலம் கடந்து வரப்பெறும் வரைவோலைகள் நிராகரிக்கப்படும்.

4. பொதுவாக குறைந்த வீத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

5. வேலை உத்திரவு கிடைக்கப்பெற்ற 3 தினங்களுக்குள் ஒவ்வொரு வேலைக்கும் ரூ.20/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் சம்பந்தப்பட்ட வேலையை குறிப்பிட்ட காலத்திற்குள் எம்.டி.எஸ்.எஸ் மற்றும் எஸ்.எஸ்.ஆர்.டியின்படி திருப்திகரமாக செய்து முடிக்கும் பொருட்டு செயல் அலுவலரிடம் உரிய படிவத்தில் பத்திரம் ஒன்று எழுதிக் கொடுக்க வேண்டியது. தவறினால் வேலை உத்திரவு இரத்து செய்யப்பட்டு வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

6. வேலை நடைபெறும் இடங்களில் திட்டத்தின் பெயர், வேலையின் பெயர், மதிப்பீட்டு செலவு, வேலை உத்திரவு வழங்கப்பட்ட நாள், வேலையை செய்து முடிக்கும் நாள் மற்றும் ஒப்பந்ததாரர் பெயர் குறித்த அறிவிப்பு பலகை கண்டிப்பாக நிறுவப்பட வேண்டும்.

7. வேலை நடைபெறும் முன்பும், வேலை நடைபெறும் பொழுதும் மற்றும் வேலை முடிவுற்ற பின்பும் புகைப்படங்கள் எடுத்துக் கொடுக்க வேண்டும்.

8. வேலையின் மதிப்பீட்டு தொகையில் 0.3 சதவீதம் தொகையினை தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல சந்தா தொகையாக வங்கி வரைவு மூலம் வேலை உத்திரவு வழங்கப்பட்ட மூன்று நாட்களுக்குள் செயல் அலுவலரிடம் வழங்க வேண்டும்.

9. வேலைகளுக்கு ஒ.பி.சி சிமெண்டை மட்டுமே பயன்படுத்த வேண்டும். வேலைக்கு பயன்படுத்தப்படும் **பொருள்களுக்கு ஐ.எஸ்.ஐ.தரச்சான்று பெற்று,** அனைத்தும் உதவி பொறியாளர் அவர்களின் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.

10. **இப்பணிகளில் தரைமட்டப் பணிகள் நடைபெறும் பொழுது குடிநீர்த்திட்ட பைப்லைன், மற்றும் தொலைதொடர்பு கேபிள்கள் பழுது பட்டால் ஒப்பந்ததாரரே தனது சொந்த பொறுப்பில் பழுது நீக்கம் செய்து துறைக்கு ஒப்படைக்க வேண்டியது.** நிர்வாகம் இதற்கு பொறுப்பேற்காது.

11. கட்டுமான வேலைகளுக்கு தேவைப்படும் தண்ணீரை ஒப்பந்ததாரரே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அனுமதியின்றி பேரூராட்சி பொது குடிநீர் குழாய்களிலிருந்தோ அல்லது இதர குடிநீர் ஆதாரங்களிலிருந்தோ வேலைக்கு தண்ணீர் பயன்படுத்துவது கண்டறியப்பட்டால் மொத்த வேலையின் மதிப்பில் 1 சதவீதம் தண்ணீர் பயன்படுத்திய செலவிற்காக பட்டியலில் பிடித்தம் செய்து கொள்ளப்படும்.

12. வேலையை செய்ய ஒப்பந்ததாரால் ஈடுபடுத்தப்பட்டுள்ள யாதொரு நபருக்கு அல்லது வேலைகளுக்கு அல்லது போக்குவரத்து வாகனத்திற்கு இவ்வேலையைச் செய்யும் பொழுது ஏற்படும் சேதாரம் அல்லது தேய்மானம் ஆகியவற்றிற்கு இப்பேரூராட்சி நிர்வாகம் பொறுப்பேற்காது.

13. ஒப்பந்ததாரருக்கு தொழில் நுட்ப தகுதி இல்லாதிருந்தால் LCE/DCE/LCS படிப்பு முடித்த நபர் அல்லது ஓய்வு பெற்ற இளநிலை பொறியாளர் அல்லது LCS (Civil) போன்ற தகுதியுள்ள நபரை தொழில் நுட்ப உதவியாளராக இவ்வேலை நடைபெறும் இடத்தில் கண்டிப்பாக நியமிக்க வேண்டும். இவ்வாறு இளநிலை பொறியாளர், அவரது அதிகாரம் பெற்றவரால், செயல் அலுவலரால் அல்லது வேறு அரசு உயர் அதிகாரிகளின் ஆய்வின் போது மேற்காணும் தகுதி உள்ள தொழில் நுட்ப உதவியாளர் இல்லாமல் வேலை நடைபெறுவது கண்டறியப்பட்டால் மறு அறிவிப்பின்றி ஒப்பந்ததாரருக்கு அபராதமாக ரூ.1000/– விதிக்கப்படும்.

14. பேரூராட்சியின் உதவி பொறியாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் அல்லது சம்பந்தப்பட்ட அரசு உயர் அதிகாரிகளால் வேலை நடைபெறுவதை கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும், அளவுகள், மேலளவுகள் எடுக்கவும் உரிமையுண்டு.

15. பேரூராட்சியின் உதவி பொறியாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால்அல்லது சம்பந்தப்பட்ட அரசு உயர்அதிகாரிகளின் கட்டளைப்படி வேலையினை M.D.S.S.–ன்படி (Madras Detailed Standard Specification) திருப்திகரமாக செய்து முடிக்க வேண்டும்.

16. வேலை முடிவுற்றபின் சம்பந்தப்பட்ட பொறியாளரால் அளவு, மேலளவு எடுத்து சரிபார்த்து தயாரித்து கொடுக்கப்படும் பட்டியலில் கண்டுள்ள தொகைக்கு உரிய பிடித்தங்கள் செய்து கொண்டு மீதமுள்ள தொகை காசோலை மூலம் நியமன காலக் கெடுவிற்குள் வழங்கப்படும். திட்டப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு தொகை கிடைத்த பின்புதான் தொகை வழங்கப்படும்.

17. மொத்த வேலையின் மதிப்பில் வருமான வரி 2 சதவீதம் அதற்கு மேல் வரி 12 சதவீதமும் சேர்த்து வரும் தொகையில் கல்வி வரி 2 சதவீதம் மற்றும் விற்பனை வரி 2 சதவீதம் ஆகியவைகள் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட தலைப்புகளில் செலுத்தப்படும்.

18. இப்பணிகளுக்காக முன்பணங்கள் மற்றும் கட்டுமானப் பொருள்கள் ஏதும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட மாட்டாது.

19. பின்வரும் காலங்களில் ஒப்பந்தப்புள்ளிகளின் மீது தணிக்கை மறுப்புகளோ, அல்லது உயர் அதிகாரிகளின் கட்டளைப்படியோ தொகை பிடித்தம் செய்ய வேண்டி இருப்பின், ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி இட்டு வைப்புத் தொகைகளிலிருந்து அத் தொகை சரி செய்து கொள்ளப்படும். வைப்புத் தொகை கணக்கிலுள்ள தொகைக்கு மேல் பிடித்தங்கள் இருப்பின், செயல் அலுவலரால் தெரிவிக்கப்படும் கால அளவிற்குள் ரொக்கமாக பேரூராட்சியில் செலுத்த ஒப்பந்ததாரர்கள் கட்டுப்பட்டவர்கள்.

20. ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பெறப்பட்ட பணிகளை உள் ஒப்பந்தத்திற்கு விடக்கூடாது.

21. வேலை முடிவுற்ற பின் ஒப்பந்ததாரர்களால் வேலை நடைபெற்ற இடங்களில் விட்டுச் செல்லப்படும் பொருள்களை ஒரு மாத காலத்திற்குள் அப்புறப்படுத்திக் கொள்ளவில்லை எனில் அவை பேரூராட்சியால் கைப்பற்றிக் கொள்ளப்படும்.

22. இந்நிபந்தனைகளுக்குட்படாமலும், உரிய காலக் கெடுவிற்குள் வேலையை முடிக்காத ஒப்பந்ததாரர்களுக்கு செயல் அலுவலர் தமக்கு தகுதியாய் தோன்றும் தொகையினை அபராதமாக விதித்து வசூலிக்க உரிமையுண்டு.

**23. மேற்குறிப்பிட்ட கால அளவுக்குள் பணியை முடிக்காத ஒப்பந்ததாரர் அடுத்தப்படியாக வழங்க இருக்கும் ஒப்பந்தத்தில் கலந்து கொள்ள முற்றிலும் தகுதியற்றவர் ஆவார்.**

24. உசிதம் போல் ஒப்பந்தப்புள்ளி தேதியை ஒத்திப்போடவோ அல்லது நிறுத்தி வைக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு.

25. மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்ட ஒப்பந்ததாரர்கள் மட்டுமே மேற்படி வேலைக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுக்கலாம்.

26. திட்டப்பணிகளுக்கான பட்டியல் தொகை அந்த திட்டங்களுக்கான ஒதுக்கீட்டு தொகை கிடைத்த பின்னரே வழங்கப்படும்.

27. பொதுநிதியிலிருந்து வழங்க வேண்டிய தொகை பேரூராட்சியின் நிதி நிலைக்கேற்றவாறு வழங்கப்படும்.

28. இதர நிபந்தனைகளை அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

29. ஒப்பந்தப்புள்ளிகள் சம்மந்தமான விவரங்களை இணை தளத்தில் www.tntenders.gov.in என்ற வலைதள முகவரியில் பார்த்துக் கொள்ள வேண்டியது.

**(ஒ.ம்) பி.ஜெயக்குமார்,**
**தலைவர்,**
இரா.புதுப்பட்டி பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம்.

**(ஒ.ம்) மு.ஆறுமுகம்,பி.ஏ.,பி.எல்.,**
**செயல் அலுவலர்,**
இரா.புதுப்பட்டி பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம்.

**பெறுதல்** :– பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்.

**நகல்:–**

1. இளநிலைப் பொறியளர், நாமகிரிப்பேட்டை பேரூராட்சி தொகுப்பு
2. அலுவலக விளம்பர பலகைக்கு.